ශ්‍රී ලංකා මහජන උපයෝගිතා කොමිෂන් සභාව
இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
PUBLIC UTILITIES COMMISSION OF SRI LANKA

ඔබේ අංකය
உமது இல
Your No.

අපේ අංකය
எமது இல.
Our No.

දිනය
திகதி
Date

**ஊரடங்கு சட்டம் அமுலிலுள்ள காலப்பகுதியிலும் உடனடியாக அதற்கு பின்னரும் மின்சார பட்டியல்களை வழங்கல் மற்றும் செலுத்துதல் குறித்த வழிகாட்டுதல்கள்**

ஊரடங்கு சட்டம் அமுலிலுள்ள காலப்பகுதியிலும் உடனடியாக அதற்கு பின்னரும் மின்சார பட்டியல்களை வழங்குவதை எளிதாக்குதல் மற்றும் கட்டணங்களை செலுத்துவதற்கு பாவனையாளருக்கு கூடுதல் சேவைகளை (தேவை ஏற்படின்) வழங்குவது தொடர்பில் இலங்கை மின்சார சபை (இ.மி.ச.) மற்றும் இலங்கை தனியார் மின்சார நிறுவனம் (லெகோ) ஆகியவை பின்பற்ற பரிந்துரைக்கப்பட்ட இடைக்கால நடவடிக்கைகள் இவ்வழிகாட்டுதல்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மின் பட்டியல்களில் தற்போது வழங்கப்பட்டுவரும் சலுகை கட்டணங்களை பெறுவதற்கான பாவனையாளர்களின் உரிமை எதிர்காலத்தில் மேம்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படுவதுடன், தற்போதைய மின் பட்டியல் கணக்கிடப்படும் முறை மற்றும் மின் பட்டியல் வழங்கலில் ஏற்படும் முரண்பாடுகளும் தவிர்க்கப்படும்.

1. **மின் பட்டியல் வழங்கல்**

   மின்சார பட்டியல்களை வழங்குதல் மற்றும் கட்டணங்களை செலுத்தும் நடவடிக்கைகளுக்கு இ.மி.ச. மற்றும் லெகோ ஆகிய நிறுவனங்கள் பின்வரும் வசதிகளை வழங்கக்கூடும். இங்கே கொடுக்கப்பட்டுள்ள நடைமுறைக்கேற்ப உண்மையான பட்டியல்கள் முதல் சந்தர்ப்பத்தில் வழங்கப்படும். இதில் சில்லறை மற்றும் மொத்த மின்மானிகள் உள்ளடங்குவதுடன், அவை நேரில் பார்வையிடுவதன் மூலம் அல்லது தொலைவிலிருந்து கட்டுப்படுத்தி இயக்கப்படும்.

   அ. பாவனையாளர்களின் (சில்லறை மற்றும் மொத்த) உண்மையான நுகர்வு அடிப்படையில் மின் பட்டியல்கள் வழங்கப்படும்.
   ஆ. இக்காலப்பகுதியில் பாவனையாளர்களுக்கு மின் பட்டியலை வழங்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள் வருமாறு:

      1. வழக்கமான மின் பட்டியல் சுழற்சியைத் தொடர்ந்து நேரடியாக பார்வையிடுவதன் மூலம் அல்லது தொலைதூர கண்காணிப்பு மூலம் மின்மானி வாசிக்கப்பட்ட பாவனையாளர்களுக்கு உண்மையான மாதாந்த பட்டியல்கள் வழங்கப்பட வேண்டும்.
      2. ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு பின்னர் மின்மானி வாசிக்கப்பட்டு, அக்காலப்பகுதிக்குரிய மின் பட்டியல் வழங்கப்படாத சந்தர்ப்பத்தில், இ.மி.ச. மற்றும் லொகோ ஆகிய நிறுவனங்கள் மதிப்பிடப்பட்ட சார்பு அடிப்படையில் மின் பட்டியல்களை கணக்கிட்டு, ஒவ்வொரு மாத காலத்திற்கும் தனித்தனி மின் பட்டியல்களை வழங்கும்.

06 වන මහල, ලංකා බැංකු වෙළෙඳ කුළුණ, 26, ශාන්ත මයිකල් පාර, කොළඹ 03, ශ්‍රී ලංකාව.
06 ஆவது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம், 28, சென் மைக்கல் வீதி, கொழும்பு 03, இலங்கை.
Level 06, BOC Merchant Tower, 28, St. Michael's Road, Colombo 03, Sri Lanka.
Tel : +94 11 2392607/8 Fax : +94 11 2392641 E-mail : info@pucsl.gov.lk Web : www.pucsl.gov.lk
සභාපති / தலைவர் / Chairman +94 11 2392604
අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General +94 11 2392606

3. ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு பின்னர் மின்மானி வாசிக்கப்பட்டு, மதிப்பீட்டு அடிப்படையில் அக்காலப்பகுதிக்குரிய சில பட்டியல்கள் வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் திருத்தம் காணப்படும் பட்சத்தில், குறித்த பாவனையாளரின் மொத்த நுகர்வு அக்காலப்பகுதிக்கேற்ப சமமாக பிரிக்கப்பட்டு, மதிப்பிடப்பட்ட அனைத்து பட்டியல்களுக்கும் தனித்தனியாக பயன்படுத்தப்படும். இந்த திருத்தம் தொடரும் மின் பட்டியல் சுழற்சியின் போதும் பயன்படுத்தப்படும்.

## 2. பிற தொடர்புடைய விபரங்கள் (பரிசீலனைகள்)

- மாதாந்த மின் பட்டியல்களை வழங்குவதில் ஏற்படும் தாமதம் காரணமாக பாவனையாளர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பதையும், மின் கட்டணத்தில் காணப்படும் அதிகரிப்பு, பட்டியல்களை கணக்கிடும்போது நியாயமான முறையில் பயன்படுத்தப்படும் எனவும் பாவனையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும்.

உதாரணம்: கடந்த வாசிப்பிலிருந்து 60 நாட்களுக்கு பின்னர் மின்மானி வாசிக்கப்படுமாயின், அக்காலப்பகுதிக்குரிய மொத்த நுகர்வு 120 அலகுகளுக்கு குறைவாக காணப்படுமாயின், முதல் 60 அலகுகளுக்கு ஒரு அலகு ரூபாய் 2.50 வீதம் கணக்கிடப்படுவதுடன், அடுத்த 60 அலகுகள் ஒரு அலகு ரூபாய் 4.85 வீதம் கணக்கிடப்படும்.

- குறித்த காலப்பகுதிக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மின் பட்டியல்கள் ஒரே தடவையில் வழங்கப்படுமாயின், கட்டணங்களை செலுத்த சலுகை விதிமுறைகளை வழங்குவது குறித்து பரிசீலிக்கவும், தேவையான சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவின் ஒப்புதலைப் பெறவும் இ.மி.ச. அல்லது லெகோ-விற்கு கோரப்படுகிறது.
- கட்டணங்களை செலுத்துவதற்கு பாவனையாளர்களுக்கு வழங்கப்படும் சலுகை விதிமுறைகள் நிறுவப்பட்டு பாவனையாளர்களுக்கு அறிவிக்கப்படும் வரை மின் கட்டணங்களை செலுத்தாமை காரணமாக மின் துண்டிப்பு மேற்கொள்ளப்பட கூடாது என இ.மி.ச. மற்றும் லெகோ-விடம் கோரப்படுகிறது.
- வழங்குநர்களால் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்ட செயலிகள் மற்றும் ஏற்படுத்தப்பட்ட வசதிகள் மூலமாக பணம் செலுத்த பயனாளர்களை ஊக்குவிக்க பரிந்துரைக்கப்படுகிறது.
- மின் கட்டணங்களை செலுத்துவதற்கு மொபைல் கட்டண கியோஸ்களை அறிமுகப்படுத்துவதுடன், கட்டணம் செலுத்தியமையை உறுதிபடுத்தும் வகையில் உறுதிச்சீட்டொன்றை வழங்கல்.